சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி
முன்னிலை-திருமதி.M.அகிலாதேவி., M.L.,
சார்பு நீதிபதி, கோவில்பட்டி.
2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம்நாள், வியாழக்கிழமை.
மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017
-----

ஜான்சிராணி ..மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி..

/எதிர்/

1) ஜான்சன் சாமூவேல் என்ற மாரீஸ்வேல் அழகன்
2) முத்துகிருஷ்ணன்
3) ராஜாகனி
4) சுதர்கணாதேவி
5) பாப்பாத்தி ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்...

மாவட்ட உரிமையியல் நீதிபதி, விளாத்திகுளம் அவர்களால் அசல் வழக்கு எண்.61/2014-ல் 30.11.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) ஜான்சன் சாமூவேல் என்ற மாரீஸ்வேல் அழகன்
2) முத்துகிருஷ்ணன்
3) ராஜாகனி
4) சுதர்கணாதேவி
5) பாப்பாத்தி ..வாதிகள்..

/எதிர்/

ஜான்சிராணி ..பிரதிவாதி..

இம்மேல்முறையீடு இன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆ.இளங்கோ அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மாரீஸ்வரன் அவர்களும் ஆஜராகி இருந்து வந்த நிலையில், வழக்கு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், மேல்முறையீட்டாளர் தரப்பில் (Settled out of Court) வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்துபோய்விட்டதென கூறி தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை பதிவுசெய்ததின் அடிப்படையில் இவ்வழக்கில் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

பிராது தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், பிரதிவாதி தபசில் வீட்டை காலி செய்து வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்கவேண்டுமென்றும் வழக்கின் செலவுதொகை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது என பிறப்பிக்கப்பட்ட

*தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*2)இவ்வழக்கு இன்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. மேல்முறையீட்டாளர் தரப்பில் (*Settled out of Court) *வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்து போய்விட்டதென கூறி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அதை பதிவுசெய்ததின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணத் தொகையில் 5% கழிவு போக மீதி தொகையை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது.*

*2019ஆம்ஆண்டு நவம்பர் திங்கள் 07ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

*(ஒம்)*M.*அகிலாதேவி.*
*சார்பு நீதிபதி,*
கோவில்பட்டி.

மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள்,
*சான்றாவணங்கள்-இல்லை.*
*எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள்,*
*சான்றாவணங்கள்-இல்லை.*

*(ஒம்)*M.*அகிலாதேவி.*
*சார்பு நீதிபதி,*
கோவில்பட்டி.

**நகல்.**
மாவட்ட உரிமையியில் நீதிபதி,
விளாத்திகுளம்.

*சார்பு நீதிமன்றம்,*
கோவில்பட்டி.
மே.மு.வ.எண்.*1/2017*
*தீர்ப்புரை*
*நாள்.07.11.2019*

சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி
முன்னிலை-திருமதி.M.அகிலாதேவி., M.L.,
சார்பு நீதிபதி, கோவில்பட்டி.
2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம்நாள், வியாழக்கிழமை.
மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017

-----

1) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தாலுகா, வேம்பார் கிராம பஞ்சாயத்து, மதராசிபுரம் கிராமம், டிசுணாமி நகர், கதவு எண்.3/175-3ல் வசித்து வருபவருமான, விளாத்திகுளம் தாலுகா வள்ளிநாயகபுரம் கிராமத்தில் பஞ்சாயத்து யூனியன் பிரைமரி பள்ளியில் ஆசிரியையாக பணிபுரியும் கிரிஸ்டியன் கனகராஜ் மகளும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மனைவி வயது சுமார் 38 உள்ள ஜான்சிராணி. ...மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி.

/எதிர்/

1)தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், தாலுகா, வேம்பார் தெற்கு, பச்சையாபுரம் கிராமம் வடக்கு தெரு, கதவு எண்.3/22ல் குடியிருக்கும் இந்து, வயது 42 உள்ள அருணாசல நாடார் குமாரர் ஜான்சன் சாமுவேல் (எ)மாரீஸ்வேல் அழகன்.
2) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தாலுகா, வேம்பார் தெற்கு, பச்சையாபுரம் கிராமம், வடக்கு தெரு கதவு எண்.3/22-ல் வசித்து வரும் அருணாச்சல நாடார் குமாரர் இந்து வயது 40 உள்ள முத்துகிருஷ்ணன்.
3) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தாலுகா, வேம்பார் தெற்கு, பச்சையாபுரம் கிராமம் வடக்கு தெரு, கதவு எண்.3/22ல் வசித்து வரும் அருணாச்சல நாடார் மனைவி இந்து வயது 67 உள்ள ராஜாக்கனி.
4) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் டவுண், பக்ராம்பேட்டை தெரு, கதவு எண்.32B-ல் வசித்து வரும் மருகேசபாண்டியன் மனைவி இந்து வயது 46 உள்ள சுதர்கணாதேவி.
5) பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம், நெல்லித்தோப்பு, பெரியார் நகர், 7வது குறுக்கு தெரு, கதவு எண்.5ல் வசித்து வரும் பாலகிருஷ்ணன் மனைவி இந்து வயது 44 உள்ள பாப்பாத்தி. ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, விளாத்திகுளம் அவர்களால் அசல் வழக்கு எண்.61/2014-ல் 30.11.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) ஜான்சன் சாமூவேல் என்ற மாரீஸ்வேல் அழகன்
2) முத்துகிருஷ்ணன்
3) ராஜாகனி
4) சுதர்கணாதேவி
5) பாப்பாத்தி ..வாதிகள்..

/எதிர்/

ஜான்சிராணி ..பிரதிவாதி..

மேல் முறையீடுதாக்கலானநாள் - 23.01.2017

கீழமைநீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தின் மதிப்பு - ரூ.75,000/-ஆக மதிக்கப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டின் கோரப்பட்டுள்ள பரிகாரத்தின் மதிப்பு - ரூ.75,000/-ஆக மதிக்கப்பட்டுள்ளது.

கீழமைநீதிமன்றத்தில் நீதிமன்றக் கட்டணம் - ரூ.75.000/-ஆக மதித்து அதற்கு

தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்
கட்டணச்சட்டம் பிரிவு.25(a)-ன்படி
ரூ.5,627/-க்கு-முத்திரைக்கட்டணம் செலுத்தப்
பட்டுள்ளது.

மேல்முறையீட்டின் நீதிமன்றக்
கட்டணம் - ரூ.75,000/-ஆக மதித்து அதற்கு
தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்
கட்டணச்சட்டம் பிரிவு.25(a)-ன்படி
ரூ.5,627/-க்கு-முத்திரைக்கட்டணம் செலுத்தப்
பட்டுள்ளது.

இம்மேல்முறையீடு இன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆ.இளங்கோ அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மாரீஸ்வரன் அவர்களும் ஆஜராகி இருந்து வந்த நிலையில், வழக்கு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், மேல்முறையீட்டாளர் தரப்பில் (Settled out of Court) வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்துபோய்விட்டதென கூறி தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை பதிவுசெய்ததின் அடிப்படையில் இவ்வழக்கில் வழங்கும், தீர்ப்பாணை.

1) இம்மேல்முறையீட்டு வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்து விட்டபடியால் தள்ளுபடி செய்யப்பட்டு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.
2) மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ள நீதிமன்றமுத்திரை கட்டணத் தொகை ரூ.5,627/-ல் 78(2)-(Court fee Act)-ன்படி கழிவு போக மீதி தொகையை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது.

**தபசில்.**

(கீழமை நீதிமன்ற தீர்ப்பாணையில் கண்டுள்ளபடி).

2019ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 07ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்)M.அகிலாதேவி.
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

**நகல்:**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
விளாத்திகுளம்.

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
மே.மு.வ.எண்.1/2017,தீர்ப்பாணை
நாள்-07-11-2019.